Puducherry / Regional Bulletin / Tamil / 18.10hrs / 27.5.2024/ Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 27.5.2024 - திங்கட்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

உள்ளூர் திறமைகளை வளர்த்து, வேலைவாய்ப்புக்கு ஏற்றதாக மேம்படுத்துவதே, சுயசார்பு இந்தியா தொலைநோக்கின் குறிக்கோள் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சுய நலத்தை விடுத்து பொது நலனுக்கு பாடுபடுவதே, உள்ளார்ந்த ஆன்மீக உணர்வின் சமூக வெளிப்பாடு என்று, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு கூறியுள்ளார்.

இந்தியாவின் பாரம்பரிய ஞானமும், கலாச்சார சிறப்புகளும், காலம் காலமாக உலகின் கவனத்தை ஈர்த்து வந்திருப்பதாக, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு நினைவு நாள், புதுச்சேரி அரசு சார்பில், இன்று அனுசரிக்கப்பட்டது.

***மோடி பேட்டி (12)***

உள்ளூர் திறமைகளை வளர்த்து வேலைவாய்ப்புக்கு ஏற்றதாக மேம்படுத்துவதே சுயசார்பு இந்தியா தொலைநோக்கின் குறிக்கோள் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று செய்தி ஏஜென்சி ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், நேரடி ரொக்க மானியத் திட்டம் மூலம், சுமார் 38 இலட்சம் கோடி ரூபாய் பணம், மக்களின் வங்கிக் கணக்குகளுக்கு மாற்றப் பட்டுள்ளதாகத் தெரிவித்தார். புலனாய்வு அமைப்புகள் மூலமான நடவடிக்கைகள் குறித்து, பிரதமர் பேசுகையில், ஊழலை கொஞ்சம்கூட சகித்துக்கொள்ள முடியாது என்பதே அரசின் கொள்கை என்றும், தோற்றத்தின் அடிப்படையில் அன்றி, முற்றிலும் ஆதாரங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், கூறினார். நாட்டிற்கு முதலிடம் என்பதே, அரசின் ஒவ்வொரு முடிவிலும், மையப் புள்ளியாகத் திகழ்வதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

***அமித் ஷா -1 (17)***

ஜுன் 4ஆம் தேதி நடைபெற உள்ள வாக்கு எண்ணிக்கையில் தேசிய ஜனநாயக கூட்டணி 400க்கும் மேற்பட்ட மக்களவைத் தொகுதிகளில் வெற்றி பெறும் என்று, மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. அமித் ஷா கூறியுள்ளார். இன்று உத்தரப்பிரதேச மாநிலம் குஷி நகரில், தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர்,

பிரதமர் பதவி 3ஆவது முறையாக திரு. நரேந்திர மோடிக்கு கிடைக்கும் வேளையில், திரு. ராகுல் காந்தி மின்னணு வாக்குப் பதிவு எந்திரங்களை குறைகூறி செய்தியாளர்களிடம் பேசிக் கொண்டிருப்பார் என்றார்.

தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர், காங்கிரஸ் கட்சியின் தோல்விக்கான பொறுப்பு கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே மீது சுமத்தப்படலாம் என்றும், தலைவர் பதவியில் இருந்து அவர் ராஜினாமா செய்யக்கூடும் என்றும் திரு. அமித் ஷா குறிப்பிட்டார்.

உத்தரப்பிரதேஷ் முதலமைச்சரும், மூத்த பிஜேபி தலைவருமான யோகி ஆதித்யநாத் இன்று மாவ் பகுதியில் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசுகையில் 2014ஆம் ஆண்டிற்கு முந்தைய இந்தியாவிற்கும், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான இந்தியாவிற்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருப்பதாகக் கூறினார்.

***அமித் ஷா -2 (5)***

பிஜேபி தேசியத் தலைவர் திரு. ஜே.பி நட்டா, இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வாரணாசித் தொகுதியில் பிரச்சாரம் மேற்கொள்கிறார். பிரதமர் திரு. நரேந்திர மோடியும், பாரதிய ஜனதா கட்சியும் பதவியில் இருக்கும் வரை, மத அடிப்படையிலான இட ஒதுக்கீடு அனுமதிக்கப்பட மாட்டாது என்று அவர் தெரிவித்தார்.

*பீகார் -1 (15)*

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி, இன்று பீகார் மாநிலம் குஸ்ருபூர் பகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். ஆண்டுக்கு 2 கோடி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வாக்குறுதியை, தேசிய ஜனநாயக கூட்டணி அரசு நிறைவேற்றவில்லை என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி இதற்கு பதிலளிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். ஜிஎஸ்டி அமலாக்கம் மற்றும் பணமதிப்பு நீக்கத்தினால், அரசுத் துறை, தனியார் துறை மற்றும் இராணுவத்தில் வேலைவாய்ப்புகள் மூடப்பட்டு விட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

திரு. ராகுல் காந்தி இன்று பீகாரில், பாடலிபுத்ரா உள்ளிட்ட பகுதிகளிலும் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார். மூத்த ஆர்ஜேடி தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ், இன்று ஜெஹானாபாத் தொகுதியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அரசியல் சாசனத்திற்கும், இட ஒதுக்கீட்டிற்கும் முடிவு கட்டவே, பிஜேபி விரும்புவதாக அவர் குற்றம் சாட்டினார். மத்திய பிரதேச முதலமைச்சரும், பிஜேபி மூத்த தலைவருமான திரு. மோகன் யாதவ் பட்னா நகரின் மனேர் பகுதியில் இன்று தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார்.

***பீகார் -2 (5)***

பீகார் முதலமைச்சரும், ஐக்கிய ஜனதாதள தலைவருமான திரு. நிதிஷ் குமார், இன்று நாலந்தா தொகுதியில் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார். நாலந்தா, பாடலிபுத்ரா உட்பட பீகார் மாநிலத்தின் 8 தொகுதிகளில், 7ஆவது மற்றும் இறுதிக் கட்ட மக்களவைத் தேர்தலின் ஒரு பகுதியாக, வரும் ஜுன் 1ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது.

***ஒடிசா (11)***

வரும் ஜுன் 1ஆம் தேதி, 7ஆவது மற்றும் இறுதிக் கட்ட மக்களவைத் தேர்தலின் ஒரு பகுதியாக ஒடிசாவில் தேர்தல் நடைபெற உள்ள 6 தொகுதிகளில், அனைத்து அரசியல் கட்சிகளும், தத்தம் வேட்பாளர்களுக்கு ஆதரவாக தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். ஒடிசா முதலமைச்சரும், பிஜு ஜனதாதளத் தலைவருமான திரு. நவீன் பட்நாயக் இன்று கேந்திரபாரா தொகுதியில், தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு. நரேந்திர மோடி, வரும் 29ஆம் தேதியும், மத்திய அமைச்சரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு. அமித் ஷா, நாளையும் ஒடிசாவில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளனர். காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி, வரும் 30ஆம் தேதி, ஒடிசா மாநிலம் சிமுலியா பகுதியில், தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

***பிரம்ம குமாரி (13)***

சுய நலத்தை விடுத்து பொது நலனுக்கு பாடுபடுவதே உள்ளார்ந்த ஆன்மீக உணர்வின் சமூக வெளிப்பாடு என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு கூறியுள்ளார். பிரம்ம குமாரிகள் அமைப்பின் சார்பில், புதுடெல்லி பாரத் மண்டபத்தில் இன்று நடைபெற்ற விழாவில், **ஆரோக்கியத்துடன் கூடிய தூய சமுதாயத்திற்கான தேசிய ஆன்மீக அதிகாரப் பங்கேற்பு இயக்கத்தை** தொடக்கி வைத்துப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். ஆரோக்கியமான மனப்போக்கே, ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கு அடிப்படை என்றும், ஆன்மீக ரீதியிலான அதிகாரமே, நிஜமான அதிகாரம் என்பதால், அனைவரிடத்திலும் ஆன்மீகப் பண்புகளை விதைத்தல் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார். பெண்கள் தலைமையில் உலக அளவில் செயல்படும் பிரம்ம குமாரிகள் இயக்கம், இளைஞர்களிடையே ஆன்மீகப் பண்புகளை வளர்க்கப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதையும் குடியரசுத் தலைவர் பாராட்டினார்.

***தன்கர் (18)***

இந்தியாவின் பாரம்பரிய ஞானம், மற்றும் சிந்தனைகளும் ஆரோக்கியம் மற்றும் கலாச்சார சிறப்புகளும், காலம் காலமாக, உலகின் கவனத்தை ஈர்த்து வந்திருப்பதாக, குடியரசுத் துணைத் தலைவர்

திரு. ஜக்தீப் தன்கர் கூறியுள்ளார். கர்நாடக மாநிலம் பெலகாவியில் இன்று தேசிய பாரம்பரிய மருத்துவ கழகத்தில் நடைபெற்ற விழாவில் அவர் பேசுகையில், யோகா போன்ற இந்தியாவின் பாரம்பரிய விஞ்ஞானத்தால், நவீன வாழ்க்கை முறையின் சவால்களையும் சமாளிக்க முடிவதாகக் கூறினார். பாரம்பரிய மருந்துகள் மற்றும் மருத்துவ முறைகள் குறித்து, ஆராய்ச்சிகளை அதிகரிக்க வேண்டும் என்றும், இதனால் சமுதாயம் பெரிய அளவில் பயன் பெறும் என்றும் குடியரசு துணைத் தலைவர் வலியுறுத்தினார். அறிவியல் ஆராய்ச்சிகளுக்கான உலகக் கேந்திரமாக இந்தியா மேம்பட்டு வரும் நிலையில், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகளில் முதலீடுகளை அதிகரித்தல் அவசியம் என்று அவர் கூறினார். 2047ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை எட்டுவதில், ஒவ்வொருவரும் பங்களிக்க வேண்டும் என திரு. ஜக்தீப் தன்கர் கேட்டுக் கொண்டார். நாடும் – சமூகமும் – தனி மனிதர்களும் ஆரோக்கியமான வழிமுறைகளை பின்பற்றினால்தான், நாடு வளம் பெறும் என்றும், அவர் குறிப்பிட்டார்.

***நேரு – மோடி (12)***

முன்னாள் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவின் நினைவு நாளான இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூக ஊடகத்தில் அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்தி உள்ளார். காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன

கார்கே, கட்சியின் மூத்த தலைவர் திருமதி. சோனியா காந்தி உள்ளிட்டோர், டெல்லி சாந்தி வனத்தில் உள்ள நேரு சமாதியில் மலர் அஞ்சலி செலுத்தினர். ஜவஹர்லால் நேருவின் ஈடு-இணையற்ற பங்களிப்பின்றி, இந்திய வரலாறு, முழுமை பெறாது என்று திரு. மல்லிகார்ஜுன கார்கே, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் கூறியுள்ளார். நவபாரத சிற்பி பண்டித ஜவஹர்லால் நேரு, அறிவியல், தொழில், பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறுத் துறைகளில், இந்தியாவை முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்றவர் என்றும், ஜனநாயகத்தின் பாதுகாவலராகத் திகழ்ந்தவர் என்றும் திரு. கார்கே தெரிவித்துள்ளார்.

***நேரு புதுச்சேரி (4)***

முன்னாள் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு நினைவு நாள் புதுச்சேரி அரசு சார்பில் இன்று அனுசரிக்கப்பட்டது. கடற்கரைச் சாலை காந்தி திடலில் உள்ள ஜவஹர்லால் நேருவின் திருவுருவச் சிலைக்கு, செய்தி-விளம்பரத் துறை இயக்குநர் திரு. தமிழ்ச் செல்வன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

***வானிலை -1 (18)***

வடக்கு வங்கக் கடலில் நேற்று நிலவிய ரீமல் புயல் வடக்குத் திசையில் நகர்ந்து, நள்ளிரவு வாக்கில் வங்க தேசம் மற்றும் மேற்கு வங்காள கடற்கரையை கடந்தது. தீவிரப் புயல் பின்னர், புயலாக வலு குறைந்து

விட்டதால், மேற்கு வங்கத்தில் மழை படிப்படியாகக் குறையும் என்று இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. ஆயினும், மாநிலத்தின் கிழக்கு மாவட்டங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதை கருத்தில் கொண்டு அரசு நிர்வாகம் தொடர்ந்து உஷார் நிலையில் வைக்கப் பட்டுள்ளது.

இதற்கிடையே, ஒடிசா மாநிலத்தின் பாலாசோர், கேந்திரபாரா மற்றும் பத்ரக் மாவட்டங்களிலும் இன்று மழை நீடிக்கலாம் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. புயல்-மழை நிலவரங்களை எதிர்கொள்வதற்கான தயார் நிலை குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று புதுடெல்லியில், மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். ரீமல் புயல் காரணமாக வங்க தேசத்தின் கடலோரப் பகுதிகளிலும் கன மழை பெய்து வரும் நிலையில், இந்திய வானிலை ஆய்வுத் துறை, வங்க தேசத்திற்குத் தேவையான, வானிலைத் தகவல்களையும், தொடர்ந்து வழங்கி வருகிறது.

இதற்கிடையே, இன்று தென்னிந்திய பகுதிகளின் மேல், வளி மண்டலத்தின் கீழடுக்குகளில் வடமேற்கு, மற்றும் மேற்கு திசை காற்று நிலவுவதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

***வானிலை -2 (7)***

இதன் காரணமாக வரும் ஜுன் 2ஆம் தேதி வரை தமிழகத்திலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப் படுகிறது. பலத்த சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள்

வரும் 31ஆம் தேதி வரை, வங்கக் கடல் பகுதிகள், மற்றும் தமிழகத்தை ஒட்டிய கடலோரப் பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மழை பெய்துள்ளது. குமரி மாவட்டம் முள்ளங்கினாவிளையில், 2 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

***ஆயுஷ் (17)***

மத்திய ஆயுஷ் துறை அமைச்சகம், அகில இந்திய ஆயுர்வேத கழகத்துடன் இணைந்து இன்று புதுடெல்லியில் ஆயுர்வேத மருத்துவ மனைகளுக்கும், பொது காப்பீட்டு நிறுவனங்களுக்கும் இடையிலான தகவல் பகிர்வு நிகழ்ச்சி ஒன்றை நடத்தியது. பல்வேறு நோய்களுக்கான ஆயுர்வேத சிகிச்சைகளை காப்பீட்டு வசதியின் கீழ் கொண்டு வருவது குறித்து, இக்கூட்டத்தில் விவாதிக்கப் பட்டது. ஆயுர்வேத சிகிச்சைக்கான செலவை குறைப்பதன் மூலம், இத்தகைய சிகிச்சைகளின் பயன்பாட்டை அதிகரிக்க இதனால் ஏதுவாகும் என்று ஆயுஷ் துறைச் செயலர் வைத்யா. ராஜேஷ் கொட்டேச்சா, நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார். ஆயுர்வேத சிகிச்சைகளை காப்பீட்டு வசதிகளுடன் ஒருங்கிணைப்பதில், காப்பீட்டு ஒழுங்குமுறை ஆணையம் ஆற்றி வரும் முக்கிய பணிகளுக்கு தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார். ஆயுஷ்

அமைச்சகத்தின் கீழ் செயல்படும் காப்பீட்டு நிபுணர்கள் குழுவின் தலைவர் பேராசிரியர் பி.கே. மிஸ்ரா, அகில இந்திய ஆயுர்வேத கழகத்தின் இயக்குநர் பேராசிரியர் தனுஜா நிஸாரி மற்றும் பொதுக் காப்பீட்டு நிறுவனங்களின் தலைவர்களும், ஆயுஷ் மருத்துவமனைகளின் உரிமையாளர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

உள்ளூர் திறமைகளை வளர்த்து, வேலைவாய்ப்புக்கு ஏற்றதாக மேம்படுத்துவதே, **சுயசார்பு இந்தியா தொலைநோக்கின்** குறிக்கோள் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சுய நலத்தை விடுத்து பொது நலனுக்கு பாடுபடுவதே, உள்ளார்ந்த ஆன்மீக உணர்வின் சமூக வெளிப்பாடு என்று, குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு கூறியுள்ளார்.

இந்தியாவின் பாரம்பரிய ஞானமும், கலாச்சார சிறப்புகளும், காலம் காலமாக உலகின் கவனத்தை ஈர்த்து வந்திருப்பதாக, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு நினைவு நாள், புதுச்சேரி அரசு சார்பில், இன்று அனுசரிக்கப்பட்டது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS/CN/RK